# மோடி வடித்த முதலைக் கண்ணீர்!

நான், அலுவலகத்தை விட்டு இறங்கும் போது, அந்தச் சாலை முழுவதும் தண்ணீர். கால் முழு மையாக நனைந்து விட்டது. அப்புறம் ஏறின பிறகு தான் என்ன வென்று கேட்டால்? மழையும் பெய்யவில்லை வேறு எந்தக் குழாயும் உடையவில்லை, அது 'முதலைக் கண்ணீர்' என்று சொன்னார்கள்.

ஒரு மனிதர் - ஒரு நாற்பது பேர் வரை இறந்து போய் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் எனக்குத் தெரிந்து அமைச்சர்கள் களத்தில் நின்றார்கள். அதிகாரிகள் களத்தில் நின்றார்கள். ஒரு வேளை சோற்றுக்கு வாய்ப்பில்லாத ஒரு மனிதன் கூட, வெள்ளத்தின் காரணமாக சாப்பாடு இல்லாதவர்களுக்கு கொண்டு போய் சோறு கொடுத்ததைப் பார்த்திருக்கிறோம். அந்தக் காலத்தைப் பற்றி ஒரு வார்த்தையும் பேசாத ஒரு மனிதர். தேசிய பேரிடர் கூட்டணியினுடைய தலைவராக இருக்கக் கூடிய மோடி, இன்றைக்கு தமிழ்நாடு அரசாங்கம் ஒன்றுமே செய்யவில்லை என்று பேசுகிறார் என்றால் , அவர் வடித்த கண்ணீர் தான் இது வரைக்கும் வந்திருக்கிறது. அது 'முதலைக் கண்ணீர்'. அது ஒரு நயா பைசாவுக்கும் பிரயோசனப் படாது.

'பா.ஜ.க. இதயத்தில் தமிழ்நாடு இருக்கிறது' என்று சொல்லி இருக்கிறார். தமிழ் நாட்டோட இதயத்தில் பா.ஜ.க. இருக்கிறதா? அதைத்தான் நான் கேள்வி கேட்க விரும்புகிறேன். இந்த இடைப்பட்ட காலத்தில் உத்தரப்பிரதேசத்தில் ஒரு டிராக்டரில் சென்றவர்கள் அந்த டிராக்டர் கவிழ்ந்து, 22 பேர் இறந்து போனார்கள் என்று சொன்ன உடனே உடனடியாக நிவாரணம் அறிவிக்கிறார். குஜராத் வெள்ளத்திற்கு நிவாரணம் அறிவிக்கிறார். ஆனால் தமிழ்நாட்டிற்கு ஒரு நயா பைசாவும் கொடுக்காத இவர் எங்களுக்காக 'கண்ணீர் வடித்தார்' என்றால் அது 'முதலைக் கண்ணீரை'த் தவிர வேறு ஒன்றுமில்லை.

சென்னை மெட்ரோ, விமான நிலையம் மாதிரியான பெரிய திட்டம் 1000 கோடி ரூபாய் மதிப்பில் நகர்ப்புற மேம்பாடுத் திட்டங்களை சென்னைக்கு கொடுத்து இருப்பதாக மோடி பேசி இருக்கிறார். மெட்ரோ ரயில் இரண்டாவது பேஸ்க்கு அவர் பணம் கொடுக்கவில்லை. தமிழ்நாடு அரசாங்கம் தான் இப்போது வரை பணம்கொடுத்துக் கொண்டு இருக்கிறது.

ஒரு பொய்யைப் பேசுவதற்காக ஒரு மனிதர் அங்கே இருந்து இங்கே வருகிறார், நமது செலவில். அதாவது உங்கள் செலவிலும் என் செலவிலும் இங்கே வந்து, அந்தப் பொய்யைச் சொல்லிவிட்டுப் போகிறார். விமான நிலையம் விரிவாக்கத்திற்கு நிறைய காசு அவர் கொடுப்பார். அவர் அதனை அதானிக்குத் தான் விற்கப்போகிறார். 6 விமான நிலையங்களை ஏற்கனவே அவர் அதானிக்குத் தான் விற்றார். இதனையும் கொடுப்பதற்காக தன்னுடைய நண்பருக்காக கொடுப்பதற்காக - அதனைச் செய்திருக்கிறாரே தவிர வேறு ஒன்றுமில்லை.

நான் சிம்பிளாகக் கேட்கிறேன், நான் பசியோடு இருந்த போது; என் வீடு மழையில் இடிந்தபோது; என் வீடு மழையில் முழுவதுமாக மூழ்கிப்போன போது;, என்னுடைய ஆடு. மாடுகள் அழிந்து போன போது, ஒரு வார்த்தை; பேசுவதற்கு அவர் நாக்குவரவில்லை, எனவே அவர் பேசுவதை எதையுமே கேட்பதற்கு நான் தயாராக இல்லை. அவர் பரம்பரை ஆட்சி என்று சொன்னார் என்றால் அதற்கு சரியான சாம்பிள் இராமர் தான். அதற்குமேல் எதனையும் நான் சொல்ல விரும்பவில்லை.

தேர்தல் பத்திரத்தைப் போன்றதொரு முறைகேடு இருக்க முடியுமா? இவர் ஊழலைப் பற்றிப் பேசுகிறார். இன்றைக்கு இங்கே இருக்கக் கூடிய நிறுவனங்களை எல்லாம் கெடுத்து விட்டார்கள் என்று பேசி இருக்கிறார். தேர்தல் பத்திரத்தில் எத்தனை ஆண்டுகள் ஆகின்றது , எத்தனை ஆயிரம் கொடுத்து இருக்கிறார்கள். மொத்தம் எத்தனை தேர்தல் பத்திரங்கள். இன்றைக்கு எஸ்.பி.ஐ. வங்கியின் ஸ்டேட்மெண்ட் எடுத்துக் கொண்டால் ஜூன்30 ஆம் தேதி வரை எனக்கு டைம் வேண்டும். பா.ஜ.க.வினுடைய கொள்ளைக் கூட்டாளியாக ஸ்டேட் பேங்க் நிறுவாகம் இருக்கிறது.

அது தான் நிலைமை என்றால் உச்ச நீதிமன்றம் என்றைக்கு கேட்டதோ, அன்றைக்கே எங்களுக்கு இவ்வளவு நாள் ஆகும் என்று சொல்லி இருக்க வேண்டும். இன்றைக்கு வந்து சொல்கிறார்கள் எங்களுக்கு இவ்வளவு நாள் ஆகும் என்று சொல்கிறார்கள். இன்றைக்கு தினசரி அன்றாடம் வேலை பார்க்கின்ற ஒரு மனிதரை கொண்டு போய் விட்டால் கூட ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணி சொல்லி விடுவார்கள்.

அப்புறம் போதைப் பொருள் மொத்த விற்பனை வியாபாரியே அவர் தான். எப்படி? மத வெறி போதைப் பொருள் விற்பனை வியாபாரி. இந்தியா முழுவதும் அதைத்தான் அவர் செய்து கொண்டு இருக்கிறார். எந்தப் போதையால் நாடு அழியும் என்றால், மிகப் பெரிய போதை, மதவெறியை ஏற்றுவது தான். அதை அவர்தான் செய்து கொண்டிருக்கிறார். அதனுடைய பிதாமகன் அவர்தான்.

அவர் இன்றைக்கு நிறைய பேசினார். அவர், ஆன் லைனில் போட்டால் பிராடு வராதாம். அதனால் அவர்களுக்கெல்லாம் வருத்தமாகப் போய் விட்டதாம். அவர்களுடைய டபுள் என்ஜின் சர்க்கார் இருக்கக் கூடிய குஜராத், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், அசாம்.

அசாம் தமிழ்நாட்டை விட சிறிய மாநிலம். ஆன் லைனில், வருடத்திற்கு 6 ஆயிரம் ரூபாய் போடுவோம் என்ற திட்டத்தின் மூலம் 8 இலட்சத்து 35 ஆயிரம் போலி கணக்குகளில் வந்தது. மோடி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அசாம் முதலமைச்சர் விசாரணைக்கு உள்ளாக்கப்படவேண்டும். இவர்கள் இதனை எல்லாம் செய்ய மாட்டார்கள்.

அதாவது குஜராத்தில் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்டோருக்கு, உத்தரப்பிரதேசத்தில் இரண்டு லட்சத்து 65 ஆயிரம் பேருக்கு, மத்தியப் பிரதேசத்தில் இரண்டு லட்சத்து 51 ஆயிரம் பேருக்கு அசாமில் 8 இலட்சத்து 35 ஆயிரம் பேருக்கு மொத்தம் இந்தியா முழுவதும் 42 இரட்சம் பேருக்கு, நான் ஆன்லைனில் செய்தால் யோக்கியமாக செய்வேன் என்று சொல்லிவிட்டு, மூவாயிரம் கோடியை என்னுடைய வரிப்பணத்தை தன்னுடைய கூட்டாளிகளுக்கு தெரிந்தே டபிள் என்ஜின் சர்க்கார் என்று வைத்துக் கொண்டு கொடுத்தவர் அவர்.



**கனகராஜ்**
மூத்த தலைவர்
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

ஒரே ஒரு பேங்க் அக்கவுண்டில், ஏழரை இலட்சம் பேர்களுக்கு ஆயுஸ்மான் பாரத் நோயாளிகளுக்குக் கொடுத்த பணத்தை திருடியது யார்? இதனை நான் சொல்லவில்லை சி.ஐ.ஜி. கேட்கிறது. இன்றைக்கு வரைஅந்தக் குற்றவாளிகளை எங்கே கொண்டு வந்து வைத்து இருக்கிறீர்கள் ?

அவர் சொல்கிறார் 'நாடு தான் எனது குடும்பம்' அப்படி என்றால் குடும்பச் சொத்து இவருடைய சொத்து, இவருடைய சொத்து, இவருடைய நண்பருடைய சொத்து, அவர் 16 வயதினிலே கதையை இப்போது புதியதாக சொல்லி இருக்கிறார்.

16 வயதில் இருந்து, இவர் சொன்ன கதையையெல்லாம் மூன்றாம் கிளாசில் முதலை பிடித்த கதை பொய் என்று சொல்லி விட்டார்கள். அடுத்து ரெயில்வே ஸ்டேஷனில் டீ வித்த கதையை சொல்லிட்டாங்க, உங்கள் வயதை தாண்டி அதற்குப் பின்னால் தான் ரயில்வே ஸ்டேசனே அந்த ஊரில் வந்தது என்று சொல்லி விட்டார்கள். இவர் படித்ததாக கூறிய என்டர் பொலிட்டிக்கல் சைன்ஸ் தவறு என்று சொல்லிவிட்டார்கள்.

இவைகளை யெல்லாம் தாண்டி இவர் 16 வயதினிலே என்ற கதையைப் படிக்க ஆரம்பித்து இருக்கிறார். இந்தக் கதையெல்லாம் உண்மையில் என்ன வென்றால், அவர் தைரியமாக பேசினால்கூட எல்லாக்குற்றச்சாட்டுகளுக்கும் பதில் சொல்லக் கூடிய நிலையில் அவர் இருக்கிறார்.

அவர் சொல்லி இருக்கிறார். உங்களுக்கு உறுதி தருகிறேன். தவறு செய்தவர்கள் நான் கட்டாயம் தண்டிப்பேன் என்று சொல்லி இருக்கிறார். 2024 இல் இந்தியாக் கூட்டணி வெல்லும் போது அதில் மிகப்பெரிய, மிக ஏராளமான கொலைகளுக்கும் அல்லது நிறுவனங்களை சீரழித்ததற்கும், கொள்ளைகளுக்கும் பதில் சொல்ல வேண்டிய நபராக, முதல் நபராக நரேந்திர மோடி தான்இருப்பார். அது தான் இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமை.

அவர் சொல்கிறார், நாங்கள் 'தெர்மல் பவர் பிளான்'எல்லாம் கொண்டு வந்துட்டோம்' என்று கூறுகிறார்.

இரண்டு இலட்சம் கோடி ரூபாய்க்கு வாங்கி நான்கு இலட்சம் கோடி ரூபாய்க்கு குஜராத்தில் இருக்கக் கூடிய நிறுவனத்திற்கு விற்று அந்த இரண்டு இலட்சம் கோடி ரூபாய் எங்கே போனது? என்று கேட்காமல் பொத்தி பொத்தி பாது காக்கிறார் இல்லையா? அவற்றிற்கெல்லாம் அவர் தான் பதில் சொல்ல வேண்டும்.

இன்றைக்கு அவர்பேசியதை நான் பிரதமர் பேசியதாக பார்க்கவில்லை. ஒரு பாலிடீசன் என்கிற முறையில்பேசி இருக்கிறார். அரசு நிகழ்ச்சி என்றாலும் பேசமாட்டார். இரண்டு எம்.பி. இருந்தார்கள், கனிமொழி இருந்தாங்க, அமைச்சர்கள் எ.வ.வேலு, கீதா ஜீவன் இருந்தாங்க, அவர்கள் பெயரைக் கூட சொல்லவில்லை. அங்கே பொய் பொய்யா பேசினார். அவர் பொய் மட்டும் தான் பேசுவார்.

தூத்துக்குடியில் துறைமுக விரி வாக்கம் 2013 இல் நிதி அமைச்சராக ப.சிதம்பரம் இருந்த போது அறிவித்தது.

2014 இல் கூட்டணியில் இப்போது இருக்கின்ற ஜி.கே. வாசன் போக்குவரத்து அமைச்சராக இருந்த போது டி.பி.ஆர்.வெளியிட்டார் ஜனவரியில்.

2014 ல் அருண் ஜெட்லி அதற்கு பணமும் ஒதுக்கினார். அதற்குப் பிறகு பத்து வருடமாக அந்தத் திட்டத்தை கிடப்பில் போட்டவர் நரேந்திர மோடி. ஆனால் பத்து வருடமாக கிடப்பில் போட்டாங்க அவங்க, இதனை நங்கள் தான் செய்தோம் என்று சொல்கிறார். அந்தப் பொய்யை என்ன சொல்வது?

இங்கே பேசிய மணி சார் சொன்னது முக்கியமான விஷயம். இளம் தலைமுறையை பாதிக்கின்ற விஷயம். இந்தச் செய்தி பிப்ரவரி 28 ஆம் தேதிய செய்தியின் கிளிப்பிங். இந்த செய்தி தீக்கதிரிலும் வரவில்லை, முரசொலியிலும் வந்ததில்லை. இது 'எக்னாமிக் டைம்ஸ்' பத்திரிகையில் வந்திருக்கு. 3300 கிலோ, 3.3 டன் நர்கோட்டிங்ஸ் குஜராத்தில் பிடிக்கிறாங்க. அதில் ஐந்து வெளிநாட்டு நபர்களை அதில் பிடிக்கிறாங்க, அதன் மதிப்பு இரண்டாயிரம் கோடி ரூபாய் பெருமானம். இது பிப்ரவரி 28 ஆம் தேதிய செய்தி.

இந்தக் கோபம், நரேந்திர மோடிக்கு இந்திய நாட்டின் இளைஞர்கள் மீது உண்மையிலேயே அக்கறை இருந்தால், அன்றைக்கு இதே குதி குதித்து இருக்க வேண்டும் இல்லையா, குஜராத்தில் போய் இதை பேசி இருக்க வேண்டும் இல்லையா.

ஒரு பிரதமர் என்கிற முறையில், இந்த நாட்டில் போதைப் பொருட்களை நான் அனுமதிக்க மாட்டேன் என்று சொல்ல வேண்டும். இந்தியாவில் இது வரை அதிகமாக எங்கேயாவது போதைப் பொருட்கள் பிடிபட்டு இருக்கிறது என்று சொன்னால் அவரே சொன்னார் 5 சதவிகிதம் தான் பிடிபடுகிறது, அந்த 5 சதவிகிதத்திலே இந்தியாவில் நம்பர் ஒன் மாநிலம் எது என்றால் குஜராத்.

எனவே போதைப் பொருள் வியாபாரிகளை வைத்து இருப்பவர்கள் அவர்கள் தான். அது ஈசியா இருக்கு என்று நினைக்கிறாங்க. ஏன் என்றால் இது சென்னைக்கு வர மாட்டேன் என்கிறது , ஏன் கொச்சிக்கு வர மாட்டேன் என்கிறது, ஏன் ஜவஹர்லால் நேரு போர்ட்டுக்கு வரவில்ல. ஏன் குஜராத்தில் மட்டும் வருகிறது என்கிற கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமா இல்லையா.

3.3டன்கொஞ்சம்கூடநியாயமில்லாமல், எப்படி பேசுகிறார்கள் என்று பாருங்கள். இது மிகவும் பழைய செய்தியாக இருந்தாலும் பரவாயில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால் மணி சார் சொன்னதில் பர்ஷனலாக அட்டாக் செய்யக்கூடாது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் பொதுவாக மக்கள் மத்தியில் என்ன இருக்கு என்றால் குடும்பம் இல்லை என்றால் தவறு செய்ய மாட்டார்கள். என்ற எண்ணம் இருக்கு.

செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு குடும்பம் இல்லைதான், ஆனால் அவர்கள் அதிகமாக சொத்து சேர்த்த வழக்கில் சிறைக்கு சென்றாரா இல்லையா? இவரே வெஸ்ட் பெங்காலுக்கு போகும் போது மம்தா பானர்ஜி அவர்கள் ஊழல் செய்யவில்லை ஏன் என்றால் அவர்களுக்கு குடும்பமே இல்லை என்று சொல்வாரா இவர்?

இந்த மாதிரியான லாஜிக்கலா அதனை நாங்கள் கன்வென்ஷன் செய்கிறார்கள். அது தவறு. அதாவது மோடியின் குடும்பமே, அதானிக்கு பல கோடி சொத்து சேர்த்த, சேர்த்தது சம்பந்தமாக ஏற்கனவே பல விஷயங்கள் வந்து இருக்கு. அவரை தனி நபர் என்று சொல்லாதீங்க. அதனால் அவர் காசு வாங்க மாட்டார் பணம் வாங்க மாட்டார் என்று யாரும் சொல்லாதீங்க.

இப்போது தேர்தல் பத்திரம் சம்பந்தமான விஷயங்கள் வருகின்றது. அடிப்படையான கேள்வி என்ன வென்றால், தி.மு.க. ஊழல் கட்சி, காங்கிரஸ் ஊழல் கட்சி, இந்தியாவில் இருக்கின்ற எல்லா கட்சிகளும் ஊழல், நீங்கள் ஊழலை ஒழிக்க வந்த உத்தமர், தி.மு.க. வெளியிட்டா நான் வெளியிடுகிறேன் என்று நீங்கள் ஏன் பேசுகிறீர்கள். நீங்கள் வெளியிடுங்கள்.

2014 பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் 12 இடங்களில் வெளிப்படைத் தன்மை என்கிற வார்த்தையை உபயோகித்து இருப்பார்கள். 2019 இல் 10 இடத்தில் வெளிப்படைத்தன்மை என்கின்ற வார்த்தையை உபயோகித்து இருப்பார்கள். இப்படி யாருமே சொல்லவில்லை.

இப்படி எழுதி வைத்துக் கொண்டு தேர்தல் பத்திரத்தில் திருட்டுத் தனம். பி.எம். கேர்ஸில் திருட்டுத் தனம். பாரினில் இருந்து ஒரு அரசியல் கட்சி பணம் வாங்கக் கூடாது என்பதில் திருட்டுத் தனம். இதை யெல்லாவற்றையும் மறைப்பதற்கு ஒரு சட்டத்தை மாற்றுவது.

அதனால் தான் நான் சொல்கிறேன். நீங்கள் ஒரு விரலை நீட்டுகின்ற போது நான்கு மடங்கு உங்களை நோக்கி விரல்கள் நீட்டுகிறது என்கின்ற உணர்வை நினைக்காத ஒருமனிதராக அவர் நடந்து கொள்கிறார்.

இவர்களோடு போட்டோ எடுத்ததே தவறு என்றால், அந்த 20 கோடி ரூபாய் கொடு என்று சொல்லி என்னிடம் ஆபாச வீடியோ இருக்கு என்கிற வரை தலைவரா நியமித்தவரை என்ன சொல்லலாம்.

ஒரு சிம்பிள் லாஜிக், இவரும் நானும் போட்டோ எடுத்துட்டோம். நான் ஒரு தவறு செய்துவிட்டேன், எனவே இவர் குற்றவாளி என்று சொல்கிறீர்கள். சரி ஏற்றுக் கொள்கிறோம். ஆனா அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் இந்தக் குற்றவாளியையே மாவட்டத் தலைவராக ஆக்கிவிடுகிறார்கள். அதில் ஒட்டு மொத்தமாக குற்றம் சாட்டப் பட்டவர்களில் நான்கு பேர் பா.ஜ.க.வை சேர்ந்தவர்கள்.

இதில் என்னவென்றால், தர்மபுர ஆதினம் சாதாரண ஆள் இல்லை செங்கோலை எடுத்துக் கொண்டு போய் நிர்வகிக்கக் கூடிய பெரிய ஆள். அப்படிப் பட்டவரிடேமே பா.ஜ.க.வினர்போய் ஆபாச வீடியோ வெளியிடுவேன் என்று சொல்கிறார்கள் என்றால் பா.ஜ.க. வினரின் யோக்கியம்சம் என்ன?

இது வரை அவர்கள் எடுத்த நடவடிக்கை என்ன? உங்களிடம் அதற்குப் பதில் இல்லை. எனவே பா.ஜ.க.வினர் யோக்கியர்களாக வேஷம் போடுவது என்பது தவறு. உங்கள் தலைமை அலுவலகத்தில் வேலை பார்த்த ஜோதிக் குமார் வீட்டில் ஈ.டி.சோதனை செய்ததே அது தவறாக சோதனை செய்து விட்டது என்று கண்டனம் செய்தார்களா, இல்லையே! அவர்கள் தவறாக செய்து விட்டார்கள் என்று சொன்னார்களா? இல்லையே!

**(நியூஸ் 18 தொலைக்காட்சி 'சொல்லதிகாரம்' விவாத நிகழ்ச்சி)**



நீலகிரி மாவட்டம், உதகை சாதிமஹால் பகுதியில் பொதுபணித்துறை சார்பில் ரூ.11.86 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட அரசு அலுவலர் குடியிருப்பு (50 எண்கள்) கட்டடத்தினை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் .கா.ராமச்சந்திரன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்து, 6 அரசு அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட குடியிருப்புகளுக்கான ஆணைகளை வழங்கினார். உடன் பொதுபணித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.பி.சந்திரமோகன், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) .கௌசிக், உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ் உட்பட பலர் உள்ளனர்.

### சிறுமியின் மரணத்திற்கு தார்மீக பொறுப்பேற்று

# புதுச்சேரி உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் பதவி விலக வேண்டும்!

### புதுச்சேரி இரா. சிவா வலியுறுத்தல்!

புதுச்சேரி, மார்ச் 8-

புதுச்சேரி மாநில எதிர்கட்சித்தலைவர் இரா.சிவா விடுத்துள்ள அறிக்கையில் கூறி யிருப்பதாவது:

புதுச்சேரி முத்தியால் பேட்டை சோலை நகரை சேர்ந்த தம்பதியினரின் ஒன்பது வயதான சிறுமி அதே பகுதியில் கடந்த 2-ஆம் தேதி மதியம் 1.00 மணியளவில் காணாமல் போனார். இது தொடர்பாக முத்தியால் பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து ஐந்து தனிப்படைகள் அமைத்து தேடி வந்த நிலையில் நேற்று முன்தினம் சிறுமி தனது வீட்டின் அருகே உள்ள வாய்க்காலில் இறந்த நிலையில் கண்டெடுக்கப் பட்டது அதிர்ச்சி அளிக்கிறது.

சிறுமியின் சடலம் மூட்டையாக கட்டி வாய்க்காலில் வீசியது யார்? மூன்று நாட்களாக ஊரையே சல்லடை போட்டு தேடிய சிறுமியின் சடலம் அருகே இருந்த வாய்க்காலுக்கு வந்தது எப்படி? அந்த வாய்க்காலை பல நூறு தடவை பார்த்தவர்கள் திடீரென இரவோடு இரவாக சிறுமியின் சடலம் வந்தது எப்படி என கேள்வி எழுப்புகிறார்கள். ஐந்து தனிப்படை போலீசாரின் தேடுதல் வேட்டை நீர்த்து போனது எப்படி? தேடுதல் வளையத்தை கிடுக்கி பிடிக்காமல் காவல் துறை அலட்சயமாக இருந்தது ஏன்? பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ஆதரவாக வந்த மக்களின் போராட்டத்தை ஒடுக்க துணை இராணுவத்தை நிறுத்தியது ஏன்?

அருகில் இருந்த கேமராக்களை ஆராய்ந்து பார்த்ததில் சிறுமி அந்தப் பகுதியை விட்டு வெளியேறவில்லை என்று காவல்துறை முடிவு செய்தும், வீடு வீடாக தேடியும் ஏன் காவல்துறையினால் கண்டுபிடிக்க முடியவில்லை? வீட்டில் சிறுமியை கொன்று, சடலத்தை பதுக்கி வைத்து மூட்டை கட்டி போட்டார்களா? இதில் காவல்துறை யாரையாவது காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடுகிறார்களா? காவல்துறையின் அலட்சிய தேடுதலே சிறுமியின் மரணத்திற்கு காரணம். வீதியெங்கும் போடப்பட்ட சிசிடிவி கண்காணிப்பு கேமராக்களால் எந்த பலனும் இல்லையா? சிறுமி சடலமாக கிடந்த வாய்க்காலுக்கு அருகே கஞ்சா புழக்கம் அதிகமாக இருந்திருக்கிறது. இது எல்லாம் தெரிந்தும் காவல் துறை விசாரணையை தீவிரப் படுத்தி கோல்டன் ஹவர் என்று சொல்லக்கூடிய 24 மணி நேரத்திற்குள் சிறுமியை மீட்காதது புதுச்சேரியில் சட்டம் ஒழுங்கு கட்டுப்பாட்டில் இல்லை என்பதையே குறிக்கிறது. கடந்த வாரத்தில் நரிக்குறவர் சமூகத்தை சேர்ந்த குழந்தையை காரைக்காலில் நல்லபடியாக கண்டுபிடித்ததை போலவே இக்குழந்தையையும் மீட்டு விடுவார்கள் என்ற நம்பிக்கை பொய்த்து போனது ஏன்?

புதுச்சேரியின் குழந்தைகள் நல ஆணையத்தின் தில்லு முல்லுகளும் கட்டப்பஞ்சாயத்துகளும் வெளிச்சத்துக்கு வந்ததால் விசாரணை அறிக்கையின் மூலம் அம்பலப் பட்ட நிர்வாகிகள் கூண்டோடு ராஜினாமா செய்துள்ளார்கள். சிவசாமி தலைமையிலான இந்த குழு மீது 600 பக்கம் விசாரணை அறிக்கை சமர்ப்பித்தும் நடவடிக்கை எடுக்காதது ஏன்? ராஜினாமா செய்து ஓடியவர்கள் மீது இன்று வரை நடவடிக்கை இல்லாதது ஏன்? குழந்தைகள் நல ஆணையத்திற்கு புதிய நிர்வாகிகளை உடனே நியமனம் செய்ய வேண்டும். முடங்கி கிடக்கும் மகளிர் ஆணையத்திலும் செயல் படும் நிர்வாகிகளை உடனே நியமிக்க வேண்டும்.



புதுச்சேரியில் தலைவிரித்தாடும் கஞ்சாவும், போதை ஸ்டாம்ப், மது போன்றவைகளால் உள்ளூர் மக்களே அதிக அளவில் பாதிக்கப்பட்டு உள்ளனர். இதனால் பெண்களும் குழந்தைகளும் பாதுகாப்பற்ற சூழலை உணர்கிறார்கள்.

சிறுமி இறந்தது குறித்து புதுச்சேரி அரசு வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டும். மீண்டும் இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வும், கண்காணிப்புகளை தீவிரப்படுத்தவும் வேண்டும். பள்ளிகளில் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து காவல்துறை விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். சிறுமியை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு உரிய நீதியை காலம் தாழ்த்தாமல் உடனே வழங்க வேண்டும். குற்றவாளிகள் மீது பாரபட்சமின்றி உச்சபட்ச தண்டனையை வழங்க வேண்டும். குழந்தையை பறிகொடுத்து வாடும் குடும்பத்திற்கு ரூபாய் 20 லட்சம் நிவாரணம் வழங்குவது என்பது கண்துடைப்பாக இருக்க கூடாது. அந்த குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும். உரிமை கேட்டு போராடியவர்கள் மீது தடியடி நடத்திய காவல்துறையை வன்மையாக கண்டிக்கிறேன். உண்மையான குற்றவாளிகள் யார் என்று பொதுமக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இந்த குற்றவாளிகளுக்காக நீதி மன்றத்தில் கழக வழக்கறிஞர்கள் யாரும் வழக்காட கூடாது என அறிவுறுத்தியுள்ளேன். உள்துறையை கையில் வைத்துக் கொண்டு மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்களை கொச்சைப்படுத்தும் வகையில் அரசியல் செய்யும் புதுச்சேரி பாஜகவையும் என்ஆர்.காங்கிரஸையும் வன்மை யாக கண்டிக்கிறேன். போலி செய்திகளையும் அவதூறுகளையும் பரப்பும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன்.

தான் ஒரு துணை நிலை ஆளுநர் என்பதை மறந்து, தமிழிசை சௌந்தரராஜன் முழு பாஜக காரியகர்த்தா போல செயல்படுவதை தவிர்த்து பொறுப்புடன் செயல்பட வேண்டும். நாளை மாலை 4.00 மணிக்கு இண்டியா கூட்டணி சார்பாக அண்ணா சிலையில் இருந்து புறப்பட்டு காமராசர் சாலை வழியாக நேரு வீதி வழியாக சென்று தர்ணா போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கிறேன்.

கஞ்சா போதைப்பொருளை ஒழிக்க கோரியும், இறந்த சிறுமியின் மரணத்திற்கு நீதி வேண்டியும், இச்சம்பவத்திற்கு தார்மீக பொறுப்பேற்று புதுச்சேரியின் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் பதவி விலக வேண்டியும் நாளை மறுநாள் 8.3.2024 காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை இண்டியா கூட்டணி சார்பில் முழு பந்த் அனுசரிக்கப்படுகிறது. இதனால், தேர்வெழுதும் +2 மாணவர்கள் பாதிக்காத வகையில், பள்ளி கல்லூரி பேருந்துகள், மருத்துவமனை, பால், மருந்தகம் போன்றவைகளுக்கு விலக்கு அளித்து, பொதுமக்கள் பாதிக்காத வகையில் அனைவரின் பேராதரவோடும் உணர்வோடும் இப்போராட்டம் நடைபெறும். இவ்வாறு ஆர்.சிவா தமது அறிக்கையில் கூறயுள்ளார்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 71 வது பிறந்தநாள் விழா!

# செஞ்சி நகர தி.மு.க. சார்பில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

### அமைச்சர் செஞ்சிமஸ்தான் தொடங்கி வைத்தார்

செஞ்சி, மார்ச் 8-

தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாளை முன்னிட்டு செஞ்சி நகர தி.மு.க. சார்பில் ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி செஞ்சி கூட்ரோட்டில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி நகர கழக செயலாளர் கார்த்திக் தலைமை தாங்கினார்.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் முன்னிலை வகித்தார்.

செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்,

முதலமைச்சர் பொறுப்பேற்ற 33 மாத கால ஆட்சியில் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்பேருந்தில் மகளிர்களுக்கு கட்டணம் இல்லா பயணம், புதுமைப்பெண் திட்டத்தில் உயர் கல்வி படிக்கும் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிய முதலமைச்சர் தற்போது தமிழ் புதல்வன் திட்டத்தை அறிவித்து மாணவர்களுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு உத்தரவிட்டுள்ளார். மேலும் குடும்பத் இல்லத்தரசிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை, போன்ற திட்டங்களை அறிவித்து இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல் ஒலிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

ஆனால் மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு தமிழகத்திற்கு வழங்க வேண்டிய ஜி.எஸ்.டி. நிலுவைத் தொகையை வழங்காமல் புறக்கணிப்பு செய்கின்றனர். பிரதமர் மோடி பிரதமர் வேலையை செய்யாமல் ரியல் எஸ்டேட் தொழில் செய்கின்ற மாதிரி நம் நாட்டைபிரதமர் மோடியும் அமைச்சர் அமித்ஷாவும் இரண்டு பேரும் சேர்ந்து விற்கின்றனர். அதானியும், அம்பானியும் இருவரும் சேர்ந்து நாட்டை வாங்குகின்றனர். நாட்டை கொள்ளை அடித்து கார்ப்பரேட் கம்பெனிக்கு விற்கின்ற மோடியின்முகத்திரையை கிழித்து எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா நாட்டிலிருந்து பிரதமர் மோடியை துரத்தும் வரை ஓயமாட்டோம் என முதலமைச்சர் பிறந்த நாளில் நாம்அனைவரும் சபதம் ஏற்போம் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், அரசு வழக்கறிஞர் தமிழ் செல்வி கர்ணன்,செஞ்சி பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி,பொருளாளர் நெடுஞ்செழியன், துணைச் செயலாளர் சங்கர், மாவட்ட பிரதிநிதி சர்தார். பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் சந்திரா,லட்சுமி வெங்கடேசன், சுமித்ரா சங்கர், சங்கீதா சுந்தரமூர்த்தி, ஜான் பாஷா, நூர்ஜகான் ஜாபர், சீனிவாசன்,மோகன், பொன்னம்பலம், சிவக்குமார்,புவனேஸ்வரிஅண்ணாதுரை, மகாலட்சுமி கமலநாதன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு துணை அமைப்பாளர் சேகர், தொண்டரணி பாஷா, ஜி.டி. தனசேகரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன் துணைத் தலைவர் ராமு,சம்பத்,சந்திரன், தண்டபாணி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.50 லட்சம் செலவில் கழிவுநீர் கால்வாய், அங்கன்வாடி மையம் கான்கிரீட் சாலை அமைக்கும் பணியை சட்டமன்ற உறுப்பினரும். மாவட்டக் கழகச் செயலாளருமான இரா.இராஜேந்திரன் தொடங்கிவைத்தார். உடன் மேயர். ஆ.ராமச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பூபதி, குபேந்திரன், பேரூர் செயலாளர். தமிழரசன். பகுதி செயலாளர். சி. பிரகாஷ் மாமன்ற உறுப்பினர்கள். ராஜ்குமார். அம்சா ஆகியோர் இருந்தனர்.